Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிச்சை | ஜாதி | : | |
| த/பெ | : | கணக்கன் | தொழில் | : | வனச்சரக அலுவலர், ஓய்வு |
| கிராமம் | : | கிலாதிரி | சமயம் | : | |
| தாலுகா | : | சிவகங்கை | வயது | : | 75/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.11.2025.

(4, 5, 7 எதிரிகள் ஆஜர். 1, 2, 3,9, 10, 11, 14 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது . 6, 8, 12, 13 எதிரிகள் இறந்துவிட்டனர்.)

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு அரசு வனத்துறையின் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்சமயம் சிவகங்கை மாவட்டம், கிலாதிரி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2004 ஆம் ஆண்டு கன்னிவாடி சரகத்தில் வனவராக பணியாற்றினேன். 27.02.2004 அன்று கன்னிவாடியை சேர்ந்த திருமலைச்சாமி ரெட்டியார் மகன் ராஜாராம் என்பவர், புகார் மனுவை கொண்டு வந்து வனச்சரக அலுவலரிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவில் ராஜாராம் என்பவருக்கு சொந்தமாக தோணிமலை பகுதியில் உள்ள பட்டா நிலத்தில் இயற்கையாக வளர்ந்த தோதகத்தி மரங்களை சில அடையாளம் தெரியாதவர்கள் வெட்டிக்கொண்டிருப்பதாகவும், தோட்டக் காவலாளி தெய்வேந்திரன் என்பவர் மூலம் தனக்கு தெரிய வந்ததாகவும், மேற்படி குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை எடுக்கும் படி மனு கொடுத்தார்.

அந்த மனுவின் பேரில் வனச்சரக அலுவலர் அவர்கள் பிச்சையாகிய என் தலைமையில் தனிக்குழு அமைத்து தோட்டத்தை தணிக்கை செய்து குற்றத்தை கண்டுபிடித்து வரும்படி உத்தரவிட்டார். உடனே என் தலைமையில் கன்னிவாடி சரக வனப்பணியாளர்கள் தோட்ட உரிமையாளர் ராஜாராம், தோட்ட காவலாளி தெய்வேந்திரன் ஆகியோருடன் ராஜாராமுக்கு சொந்தமான அந்த நிலத்திற்கு சென்று தணிக்கை செய்தபோது, 7 நபர்கள் தோதகத்தி

மரங்களை வெட்டி செதுக்கி கொண்டிருந்தார்கள். என் தலைமையில் சென்ற வனப்பணியாளர்கள் சுற்றி வளைத்து 7 பேரையும் தங்கள் பொறுப்பில் வைத்துக்கொண்டு, ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களை தங்களுடைய பொறுப்பில் வைத்துக்கொண்டு வெட்டப்பட்ட மரங்களின் அளவுகளை செம்பட்டி வனவர் மகேந்திரன் அவர்கள் அளவுகள் எடுக்க, கன்னிவாடி பீட் வனக்காவலர் சாமிக்கண்ணு பெயிண்ட்டால் எண்கள் இடப்பட்டது. மேற்படி அளவுகளை நான் பதிவு செய்தேன். மீண்டும் வனச்சரக அலுவலர் அவர்களின் உத்தரவுப்படி கைப்பற்றப்பட்ட 28 செதுக்கப்பட்ட கட்டைகள் மற்றும் 2 உருட்டு கட்டைகளையும் தோட்ட உரிமையாளரிடம் ஒப்படைத்து தனித்தாளில் ஒப்புதல் பெறப்பட்டது. பார்வைமகஜர் என்னால் தயார் செய்யப்பட்டது. அந்த பார்வைமகஜர் **(அ.சா.ஆ.7/PW.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 2 கோடாரிகள், 2 ரம்பம், ஒரு வெட்டருவாள் ஆகியவற்றை கைப்பற்றி கன்னிவாடி பீட் வனக்காப்பாளர் சேர்வராயன் அவர்கள் H.நமுனா தயார் செய்தார். நான் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ராமகிருஷ்ணன் என்பவரிடம் பெற்றேன். அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் **(அ.சா.ஆ.8/PW.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிடிபட்டவர்களையும், பிடிபட்ட பொருட்களையும் சிரங்காடு கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் திரு. தண்டபாணி அவர்களிடம் ஒப்புவித்து, ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கைக்காக திரும்ப பெறப்பட்டது. மீண்டும் பிடிபட்டவர்களையும், பிடிபொருட்களையும் வனச்சரக அலுவலர் முன்பு ஆஜர் படுத்தினேன். வனச்சரக அலுவலர் அவர்கள் மரம் வெட்டிய நபர்களிடம் தனித்தனியாக விசாரணை செய்தார். அந்த விசாரணையின் பேரில் தும்மலப்பட்டியில் வசிக்கும் சரவணக்குமார் என்பவரை 27.02.2004 அன்று இரவு 11.00 மணிக்கு செம்பட்டி பிரிவு வனவர் மகேந்திரன் என்பவர் கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். வனச்சரக அலுவலர் விசாரணையின் படி கன்னிவாடியை சேர்ந்த முனியாண்டி என்பவரை 27.02.2004 அன்று என் தலைமையில் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார். அவரிடம் கோட்டைவெளி பீட் வனக்காப்பாளர் அப்பச்சி அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்.

மீண்டும் 11.00 மணி அளவில் கன்னிவாடியை சேர்ந்த பாண்டி என்பவரை கைது செய்து வில்லியம் பிரான்சிஸ் என்ற வனக்காப்பாளர் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். பிடிபட்ட அனைவரையும் வனச்சரக அலுவலகத்தில் பாதுகாப்பாக இரவு முழுவதும் வைத்திருக்கப்பட்டார்கள். மறுநாள் 28.02.2004 அன்று காலையில் என் தலைமையில் ஒட்டன்சத்திரம் சென்று முருகபாண்டி என்பவரை கைது செய்து வனச்சரக அலுவலகம் கொண்டுவரப்பட்டார். வனச்சரக அலுவலகத்தில் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. 28.02.2004 அன்று பிற்பகல் 11 நபர்களையும் கன்னிவாடி பீட் வனக்காப்பாளர் சேர்வராயன் குற்ற அறிக்கை தயார் செய்து, திண்டுக்கல் குற்றவியல் நீதிமன்றம் எண்.2 ல் நீதிபதி முன்பு ஆஜர் படுத்தப்பட்டு எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

மறுநாள் 29.02.2004 அன்று வனச்சரக அலுவலர் உத்தரவின் பேரில் 7 மரங்கள் வெட்டப்பட்ட அதே இடத்தை தணிக்கை செய்து வெட்டப்பட்ட மரங்கள் விடுபட்டுள்ளதா என்று பார்க்கும்போது இரண்டு கிளை மர துண்டுகள் விடுபட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு எண்கள் இடப்பட்டு, வனச்சரக அலுவலரின் உத்தரவின் படி 2 கட்டைகளையும் நில உரிமையாளர் திரு. ராஜாராம் அவர்களிடம் ஒப்படைத்து ஒப்புதல் தனித்தாளில் பெறப்பட்டது. 02.05.2004 அன்று என் கட்டுப்பாட்டில் இருந்த கன்னிவாடி ரிசர்வ் லேண்டில் நானும், சேர்வராயன் அவர்களும், வன்காவலர் சாமிக்கண்ணு அவர்களும் சுற்றி வந்தபோது, கோம்பை சராக பகுதியில் 5 தோதகத்தி செதுக்கிய கட்டைகள் புதர்க்குள் மறைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த கட்டைகளுக்கும் அளவு எடுக்கப்பட்டு, எண்ணிடப்பட்டு 5 கட்டைகளையும் கன்னிவாடி சிரங்காடு கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் திரு. தண்டபாணி அவர்களிடம் ஒப்படைத்து, H.நமுனா பெறப்பட்டது. அந்த H.நமுனா **(அ.சா.ஆ.9/PW.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 5 கட்டைகளையும் வனச்சரகர் முன்பு ஒப்படைக்கப்பட்டது.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த நபர்கள் நிபந்தனை ஜாமினில் வெளியே வந்து கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு கையெழுத்து செய்ய வரும்போது, வனச்சரக அலுவலர் மேற்படி நபர்களிடம் விசாரணை செய்தார். 27.02.2004 அன்று வெட்டப்பட்ட தோதகத்தி மரக்கட்டைகளில் 5 ஐ கைது செய்யப்பட்ட முருகேசன் என்பவர் 26.02.2004

அன்று கீழே கொண்டு வந்து மறைத்து வைத்ததாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலம் **(அ.சா.ஆ.10/PW.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி 5 கட்டைகளும் STOR 1/2004 வழக்கில் சம்மந்தப்பட்டவை என்பது தெரிந்து மேற்படி 5 கட்டைகளையும் நில உரிமையாளர் திரு. ராஜாராமிடம் ஒப்புவித்து, தனித்தாளில் ஒப்புதல் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் தாள் **(அ.சா.ஆ.11/PW.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த குற்றத்தின் குற்ற அறிக்கையை கன்னிவாடி பீட் வனக்காப்பாளர் சேர்வராயன் அவர்கள் தயாரித்து வனவர் என் மூலமாக மேல்நடவடிக்கைக்காக கன்னிவாடி வனச்சரக அலுவலர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor